செய்தி வெளியீடு எண்.706 நாள்.26.8.2008

2008-ல் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் தமிழ் நாட்டைச் சார்ந்த புனிதப் பயணிகளுக்கு பல்வேறு மையங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம் நடத்த தமிழ் நாடு மாநில ஹஜ் குழு ஏற்பாடு செய்துள்ளது. இப்புத்தறிவுப் பயிற்சியின்போது சவூதி அரேபியாவில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், பயண விவரங்கள், ஹஜ் பற்றிய வழிமுறைகள், ஹஜ் குழு மற்றும் ஜித்தாவிலுள்ள இந்தியத் துணை தூதரகத்தின் இதர ஏற்பாடுகள், மற்றும் இதர தகவல்கள் பற்றி விரிவாக விளக்கிக் கூறப்படும். இப்பயிற்சி முகாம்கள் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும்.

2. இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் பின்வருமாறு நடைபெறவுள்ளன:–

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் உள்ளடக்கியவை |
|---|---|---|---|
| 1. | 27–8–2008<br>புதன்கிழமை | NMZ விழா அரங்கம்,<br>நாகேஸ்வரன் கோயில் தெரு,<br>ஆம்பூர். | ஆம்பூர், பேர்ணாம்பட்டு மற்றும் உம்ராபாத். |
| 2. | 27–8–2008<br>புதன்கிழமை | மானா மூனா மன்ஜில்,<br>105, மேட்டுப்பட்டி ரோடு,<br>பேகம்பூர்,<br>திண்டுக்கல்–624 002. | திண்டுக்கல் மற்றும் தேனி |
| 3. | 28–8–2008<br>வியாழக் கிழமை | மதரஸே முஃபிதே ஆம்,<br>1328, நீல்பீல்டு மசூதி தெரு,<br>வாணியம்பாடி -635 751. | வாணியம்பாடி மற்றும் திருப்பத்தூர். |
| 4. | 28–8–2008<br>வியாழக் கிழமை | மஸ்ஜித் அல்–பிலாஸ் ஜமாத் மசூதி,<br>சுப்ரமணியபிள்ளை தெரு,<br>எஸ்.எஸ். காலனி, மதுரை–16. | மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை |
| 5. | 30–8–2008<br>சனிக்கிழமை | ஹாஜியானா அரங்கம்,<br>திருநகர் காலனி,<br>ஈரோடு–638 003. | ஈரோடு மற்றும் கரூர் |
| 6. | 30–8–2008<br>சனிக்கிழமை | அஸீஸியா ஷாதி மகால்,<br>அஞ்சுமன் தெரு,<br>வேலூர்-632 004. | வேலூர், மேல்விஷாரம், அரக்கோணம், வாலாஜாபாத், காட்பாடி, குடியாத்தம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம். |

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் உள்ளடக்கியவை |
|---|---|---|---|
| 7. | 30–8–2008<br>சனிக்கிழமை | வாவு வஜிஹா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்நோக்கு அரங்கம், திருச்செந்தூர் ரோடு, காயல்பட்டினம். | தூத்துக்குடி |
| 8. | 31–8–2008<br>ஞாயிற்றுக் கிழமை | முஸ்லிம் அனாதை இல்ல வளாகம், காதிர் நகர், ஹை கிரவுண்ட்ஸ், திருநெல்வேலி–627 011. | திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி |
| 9. | 31–8–2008<br>ஞாயிற்றுக் கிழமை | ஹஜரத் உமர் (ரலி) கல்வி அறக்கட்டளை எண்.25, சின்ன வாத்தியார் தெரு, தர்மபுரி-636 701. | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| 10. | 31–8–2008<br>ஞாயிற்றுக் கிழமை | முஸ்லிம் கல்வி அசோசியேஷன், 42/29, சன்னதி தெரு, கோட்டை, சேலம்–636 001. | சேலம் மற்றும் நாமக்கல். |

3. ஹஜ்ஜை முறையாக நிறைவேற்ற இப்பயிற்சி முகாம்களில், பெண் புனிதப் பயணிகள் உட்பட அனைத்து ஹஜ் பயணிகளும் அதாவது தேர்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் மட்டும் கலந்துகொள்ளுமாறும், அதன்மூலம் ஹஜ் பயணத்திற்கான விதிமுறைகள், வழிவகைகள் மற்றும் நடைமுறைகளை விரிவாகத் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். பன்னாட்டு பாஸ்போர்ட்டில் தனியார் ஹஜ் நிறுவனங்கள் மூலம் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள இருப்பவர்களும் இப்புத்தறிவுப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம்.

4. இதர மாவட்டங்களைச் சேர்ந்த ஹஜ் பயணிகளுக்கான புத்தறிவுப் பயிற்சி முகாம்களை ‘ரம்ஜான்’–க்குப் பிறகு நடத்தப்படும் என்பதால், மேற்குறிப்பிட்ட மையங்களில் நடத்தப்படும் புத்தறிவுப் பயிற்சியில் அவர்கள் கலந்துகொள்ள வேண்டியதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

5. இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துவதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை மாநில ஹஜ் குழு அனுப்பி வைக்க உள்ளது. அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஆலிம்கள் ஹஜ்ஜினை முழுமையாக நிறைவேற்றுவது பற்றிய விளக்கங்கள் அளிப்பார்கள்.

6. மேலும், இது குறித்து ஏதேனும் தகவல் ஹஜ் புனிதப் பயணிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி எண்கள்: 044–28252519 மற்றும் 044–28227617).

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.